

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 216 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 04 – ஞாயிற்றுக்கிழமை 17 மார்ச் 2024 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 216 : Thiruvalluvar Year - 2055 - Panguni 04 - Sunday 17 March 2024 - Dak 10 Pages ₹ 5.00


## நம் உயிருக்கு இணையான தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்த்திட

# 2025 ஜூன்: சென்னையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 17-**

**“நம் உயிருக்கு இணையான தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்த்திடும் வகையில் 2025 ஜூன் மாதம் சென்னையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற முத்தமிழுடன் இன்று கணித் தமிழும் இணைந்து நற்றமிழாக நானிலமெங்கும் சிறப்புடன் திகழ்கின்றது.

தமிழ் மொழி; தொன்மை - தனித்தன்மை - பொதுமைப் பண்பு பண்பாடு - உயர்ந்த சிந்தனை - இலக்கியத் தனித்தன்மை பங்களிப்பு ஆகிய உயர்ந்த கோட்பாடுகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றதுடன், செம்மொழி என்ற தனித்தகுதியைப் பெற்றுள்ள அரும்பெரும் மொழியாகும்.

**தமிழர்களின் கனவை நனவாக்கியவர் கலைஞர்!**

தமிழை, “உயர்தனிச் செம்மொழி” என்று முதன்முதலில் முன்மொழிந்தவர் தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் ஆவார். வளம் பெற்ற நம் மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்து தமிழர்களின் நூற்றாண்டுக் கனவை நனவாக்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கழக அரசுப் பொறுப்பேற்ற கடந்த மூன்றாண்டுகளாக தமிழ்நாடு அரசு தனிப்பெரும் நிலையில் தகுதிவாய்ந்த தமிழறிஞர்களுக்குப் பல்வேறு விருதுகளை வழங்குவதோடு, நாடறிந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை யாக்குவதும், பண்டையத் தமிழர் பண்பாட்டையும், பழங்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, நாகரிக வாழ்வு முறைமைகளையும் நுண்மையோடு பறைசாற்றும் வகையில் கீழடி அருங்காட்சியகத்தை அமைத்து, அதன் தொடர்ச்சியாக பொருநை அருங்காட்சியகத்தை அமைத்து வருவதும்; தமிழ்ப் பண்பாட்டின் மணிமகுடங்களாகும்.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் அனைத்தும் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்” என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்கும் வகையில், அறிவியல், பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பம், வேளாண்மை மற்றும் பல்வேறு துறை சார்ந்த பாடநூல்களை தமிழில் மொழிபெயர்க்கும் பெரும் பணியினைச் செய்து வருவதும், செயற்கை நுண்ணறிவைப் போற்றும் வகையில் ‘கணித் தமிழ் மாநாடு 24’ நடத்தியதும், தாய்த்தமிழை உயிர்ப்போடும் வனப்போடும் வளர்த்தெடுக்கும் கழக அரசின் முயற்சிகளாகும்.

**மாபெரும் அளவில் நடத்தப்படும்!**

மேலும் உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும் அயலகத் தமிழர் தினமாக ஜனவரி12ஆம் நாளினை “தமிழ் வெல்லும்” என்னும் கருப்பொருளை மையமாக கொண்டு 2024ஆம் ஆண்டு அயலகத் தமிழர் மாநாட்டினை வெற்றியோடு நடத்தியதும், பார் போற்றும் வகையில் பன்னாட்டு புத்தகக் கண்காட்சி நடத்தியதும்; தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்குவதும், திருக்கோயில் களில் தமிழ் வழிபாட்டினை முன்னிறுத்துவதுமான ஆகச் சிறந்த பல்வேறு தமிழ்ப் பணிகளை ஆற்றி வருகிறோம்.

**“இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”** என்பார் பாவேந்தர். நம் உயிருக்கு இணையான தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் **இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு**, சென்னையில் வரும் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐந்து நாட்கள் சீரோடும் சிறப்போடும் சிந்தனைச் செயல்திறத்தோடும் மாபெரும் அளவில் நடத்தப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




முதல்வரின் முகவரி துறையின் கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் “நீங்கள் நலமா” என்ற திட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.03.2024) முகாம் அலுவலகத்திலிருந்து பயனாளிகளை நேரடியாக வீடியோ கால் வாயிலாக தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ராகுல்காந்தியின் “இந்திய நீதிப் பயணம்” நிறைவு!

# மும்பையில் இன்று மாபெரும் பொதுக் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பு!

மும்பை, மார்ச் 17 -

ராகுல் காந்தியின் ‘இந்திய நீதி பயணம்’, மும்பையில் இன்று நிறைவடைகிறது. இன்று மாலை நடைபெறவுள்ள பிரம்மாண்ட பொதுக் கூட்டத்தில், மல்லிகார்ஜுன கார்கே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி, மணிப்பூர் முதல் மகாராஷ்டிரா வரை கடந்த, ஜனவரி14 ஆம் தேதி தனது இரண்டாவது இந்திய நீதிப் பயணத்தை தொடங்கினார். உத்தரப்பிரதேசம், பீகார், மேற்குவங்கம், குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் அவர் மேற்கொண்ட இந்த நீதிப்பயணத்தில் லட்சக்கணக்கானோர் பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில், 6 ஆயிரத்து 200 கிலோ மீட்டர் தூரம் கொண்ட தனது இந்திய நீதிப் பயணத்தை மகாராஷ்ட்ராவில் ராகுல்காந்தி இன்று நிறைவு செய்கிறார்.

இதையடுத்து, இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் மும்பையில் இன்று பிரம்மாண்ட பொதுக்கூட்டத்துக்கு செய்யப் பட்டுள்ளது. மும்பை தாதர் சிவாஜி பூங்காவில் நடக்கும் நிறைவு விழாவில் இந்தியா கூட்டணி தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தேசியவாத காங்கிரஸ் சரத் சந்திர பவார் தலைவர் சரத்பவார், மகாராஷ்டிர முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ், பீகார் முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

## பிரதமர் மோடி அவர்களே! நீங்கள்

# விஷ்வ குருவா? மவுன குருவா?

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, மார்ச் 17-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள தமது வலைதளப் பதிவில் “தன் சொந்த இயலாமையை மறைக்க தி.மு.க. மீது சேற்றை வாரி இறைக்கும் கபட நாடகத்தை எங்கள் மீனவர்கள் தோலுரிப்பார்கள். இது அரிதாரங்கள் கலைகிற காலம்” என்றும் “விஷ்வகுரு என மார்தட்டிக் கொள்ளும் பிரதமர் மவுனகுருவாக இருப்பது ஏன்?” என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து நேற்று (16.03.2024), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

“விஷ்வகுருவா மவுனகுருவா?”

கடந்த காலத்தில் தி.மு.க. செய்த பாவத்தால்தான் இலங்கை அரசால் இன்று தமிழ்நாட்டு மீனவர்கள் இன்னலுக்கு ஆளாகிறார்கள் எனப் பிரதமர் பதவியில் இருக்கும் மோடி கூசாமல் புளுகி இருக்கிறார்.

தி.மு.க. அரசின் கடும் எதிர்ப்பையும் மீறித்தான் கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது என்ற உண்மை வரலாற்றைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நாட்டின் ஒரு பகுதியை மாநில அரசால் மற்றொரு நாட்டுக்கு வழங்க முடியும் என நம்பும் அளவுக்குத்தான் பிரதமர் அப்பாவியாக இருக்கிறாரா?

**கச்சத்தீவை மீட்க பா.ஜ.க. அரசின் நடவடிக்கை என்ன?**

கச்சத்தீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து சிறைப் பிடிக்கப்படுவதையும் சித்திரவதைக்கு ஆளாவதையும் தடுத்து நிறுத்தாதது ஏன்? அவர்கள் இந்தியர்கள் இல்லையா?

> **தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டுக்குச் செய்து கொடுத்த சிறப்புத் திட்டங்கள் என்ன என்று பதில் சொல்லுங்க பிரதமரே என்று தமிழ் நாட்டு மக்கள் கேட்ட கேள்விக்கும் பதில் இல்லை! ஆனால், வழக்கமான புளுகுகளும் புலம்பல்களும் மட்டும் மேடையில் எதிரொலித்தன.**

அதானி நிறுவனத்தின் வர்த்தக நலன்களுக்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் தந்த ஒன்றிய பா.ஜ.க அரசு இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைக்காக வாய்திறக்காதது ஏன்?

**இலங்கை அரசைக் கண்டிக்காதது ஏன்?**

படகுகளைப் பறிமுதல் செய்து நாட்டுடைமை ஆக்கிவிட்டதாக அறிவிக்கிறது இலங்கை அரசு. இந்திய அரசு இதை அதிகாரப்பூர்வமாக, வெளிப்படையாகக் கண்டிக்காதது ஏன்?

**வழக்கமான புளுகுகள் - புலம்பல்கள்!**

இரண்டாவது முறையாகக் கைது செய்யப்படும் மீனவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கும் நடைமுறை என்பதே, பா.ஜ.க. ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டதுதான். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

இதற்கெல்லாம் பதிலில்லை; தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டுக்குச் செய்து கொடுத்த சிறப்புத் திட்டங்கள் என்ன என்று பதில் சொல்லுங்க பிரதமரே என்று தமிழ்நாட்டு மக்கள் கேட்ட கேள்விக்கும் பதில் இல்லை! ஆனால், வழக்கமான புளுகுகளும் புலம்பல்களும் மட்டும் மேடையில் எதிரொலித்தன.

விஷ்வகுரு என மார்தட்டிக் கொள்ளும் பிரதமர் மவுனகுருவாக இருப்பது ஏன்?

**எங்கள் மீனவர்கள் தோலுரிப்பார்கள்!**

தன் சொந்த இயலாமையை மறைக்கத் தி.மு.க மீது சேற்றை வாரி இறைக்கும் கபட நாடகத்தை எங்கள் மீனவர்கள் தோலுரிப்பார்கள். இது அரிதாரங்கள் கலைகிற காலம்!”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று – சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்களான சு.வெங்கடேசன் (மதுரை), சச்சிதானந்தம் (திண்டுக்கல்) ஆகியோர் சந்தித்துப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.இராமகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



திருவண்ணாமலை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி அறிவிப்பும் ஆணையும் வெளியிட்டமைக்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு சந்தித்து, தமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருவண்ணாமலை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நகர் மன்றத் தலைவர் உள்ளிட்ட முன்னணியினரும் உடன் உள்ளார்கள்.



வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மேல்பாடி கிராமத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே நீர்வளத்துறை சார்பில் ரூ.12.94கோடியில் கட்டப்பட்டுள்ள தரைப்பாலத்தை கழகப்பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழகசெயலாளர் கருணாகரன், என்ஜினியர் கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசு

# புதிய கல்விக் கொள்கையை ஏற்காது !

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திட்டவட்ட அறிவிப்பு!

திருச்சி, மார்ச் 17-

“தமிழ்நாடு அரசு புதிய கல்விக் கொள்கையை ஏற்காது” என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.



திருச்சியில் தமிழ்நாடு அரசு பாடநூல் கழக விற்பனை பிரிவை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை திட்டவட்டமாக எதிர்க்கிறோம் - பி.எம். ஸ்ரீ. புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள தனி கமிட்டி அமைக்கப்படும்! மாநில உரிமையைப் பறிக்கும் வகையில் தமிழக அரசுக்கு ஒன்றிய அரசு இதுபோன்று அழுத்தத்தை தருகிறது. புதிய கல்விக் கொள்கையில் பிஎம்ஸ்ரீ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து ஆனது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்து ஆய்வு மேற்கொள்ள தமிழக அரசு சார்பில் மாநிலத்துக்கென ஒரு கமிட்டி உருவாக்கப்படும். நமக்கு தர வேண்டிய மூன்றாவது தவணை, நான்காவது தவணைத்தொகை 1200 கோடி மட்டுமல்ல... அடுத்த ஆண்டு தர வேண்டிய 3 ஆயிரத்து 800 கோடி ரூபாயையும் இதில் தொடர்புப் படுத்துகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்ன ஆலோசனை சொல்கிறார்களோ, நம்முடைய மாநிலத்திற்கு என்ன தேவையோ அதை மட்டுமே செய்வோம். மாநில கல்விக் கொள்கையை அதனால் தான் உருவாக்குகிறோம். எனவே கல்வியை பொது பட்டியலில் இருந்து மாநில பட்டியலில் கொண்டு வர வேண்டியது தான் எங்களுடைய எண்ணம். அதை நோக்கி தான் நாங்கள் செயல்படுகிறோம் எங்களுடைய நிலைப்பாட்டில் இருந்து மாற்று கொள்கைக்குச் செல்வதாக யாரும் எண்ண வேண்டாம்.

புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். மாநில உரிமையைப் பறிக்கும் வகையில் தமிழக அரசுக்கு ஒன்றிய அரசு இதுபோன்று அழுத்தத்தை தருகிறது. பி.எம். ஸ்ரீ. மற்றும் தமிழகத்திற்கு தர வேண்டிய நிதி என்ற இரண்டையும் சம்பந்தமே இல்லாமல் தொடர்பு செய்து அழுத்தத்தை தருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் அன்பில்மகேஸ்பொய்யாமொழி செய்தியாளர்களிடம் கூறினார்.



தூத்துக்குடி பாளையங்கோட்டை சாலையில் உள்ள மாநகராட்சி ஐந்திணை பூங்காவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள் பயன்பெறும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள படிப்பக வளாகத்தை பயன்பாட்டிற்கு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் திறந்து வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், தி.மு.க. மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




## 18-ஆவது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது!

# தமிழ்நாட்டில் ஏப்.19-ல் ஒரே கட்டமாக தேர்தல்!

## ஜூன் 4–அன்று வாக்கு எண்ணிக்கை! தலைமைத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு!

**புதுடெல்லி, மார்ச் 17 -**

**இந்தியத் திருநாட்டின் 18வது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது.**

**தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19 அன்று தேர்தலும், ஜூன் 4 அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெறுகிறது என இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், நேற்று, புதுடெல்லியில் அறிவித்தார்.**




மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மக்களவைத் தேர்தல் 2024க்கான அட்டவணையை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் நேற்று (மார்ச் 16) அறிவித்தது. அதன்படி, ஏப்ரல் 19 தொடங்கி ஜூன் 1 வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. தமிழகம், புதுச்சேரியில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19ல் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. அன்றைய தினமே தமிழகத்தில் காலியாக உள்ள விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் நடைபெறுகிறது. நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4ஆம் தேதி எண்ணப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில் உள்ள 543 மக்களவை தொகுதிகளுக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

**7 கட்டங்களாக தேர்தல்:**

ஏப்ரல் 19 தொடங்கி ஜூன் 1 வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. மக்களவைத் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 19 ஆம் தேதி தொடங்குகிறது. இதில் 102 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

89 தொகுதிகளில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 26ம் தேதி நடைபெறுகிறது. 94 தொகுதிகளுக்கான 3 ஆம் கட்டம் வாக்குப்பதிவு மே 7ம் தேதி நடைபெறுகிறது. 96 தொகுதிகளுக்கான 4 ஆம் கட்டம் வாக்குப் பதிவு மே 13ம் தேதி நடைபெறுகிறது.

49 தொகுதிகளுக்கான 5 ஆம் கட்டம் வாக்குப்பதிவு மே 20ம் தேதி நடைபெறுகிறது. 57 தொகுதிகளுக்கான 6 ஆம் கட்டம் வாக்குப்பதிவு மே 25ம் தேதி நடைபெறுகிறது. அதேபோல், 57 தொகுதிகளுக்கான இறுதி மற்றும் 7 ஆம் கட்டம் வாக்குப்பதிவு ஜூன் 1 ஆம் தேதி நடைபெறுகிறது.

தமிழகம், புதுச்சேரியில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19ல் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. ஏற்கெனவே தமிழக அரசியல் கட்சிகள் அனைத்துமே ஒரே கட்ட தேர்தலுக்கு கோரிக்கை விடுத்த நிலையில் தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது.

- **வேட்புமனு தாக்கல் தொடக்கம் மார்ச் 20**
- **வேட்புமனு தாக்கல் முடிவு மார்ச் 27**
- **வேட்புமனு பரிசீலனை மார்ச் 28**
- **வேட்புமனு திரும்பப் பெற கடைசி நாள்: மார்ச் 30**
- **வாக்குப்பதிவு ஏப்ரல் 19**

நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4ஆம் தேதி எண்ணப்படுகிறது.

**4 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தேதி:**

அதேபோல் ஒடிசா, அருணாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி அருணாச்சலப் பிரதேசத்தில் ஏப்ரல் 19 ஆம் தேதியும், ஆந்திரப் பிரதேசத்தில் மே 13 ஆம் தேதியும், சிக்கிம்மில் ஏப்ரல் 19 ஆம் தேதியும், ஒடிசாவில் மே 13 ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

முன்னதாக, மக்களவைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக மேலும் பேசிய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், "இந்த ஆண்டில் நடைபெறும் மிக முக்கியமான செய்தியாளர்கள் சந்திப்பு இது தான். மக்களவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன. மக்களவைத் தேர்தலை நடத்த நாங்கள் முழு வீச்சில் தயாராக இருக்கிறோம். தேர்தலை திருவிழா போல் நடத்த வேண்டும் என்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கம். தேர்தல் திருவிழாவில் எங்களுடன் சேர்ந்து வாக்காளர்களாகிய நீங்களும் பங்கேற்றுக் கொள்ளுங்கள்.

**96.8 கோடி வாக்காளர்கள்:**

2024 மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க நாடு முழுவதும் 96.8 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 49.7 கோடி பேர் ஆண்கள், 47.1 கோடி பேர் பெண்கள். மாற்றுத்திறனாளிகள் 88.4 லட்சம் பேர். மாற்று பாலினத்தவர் 48 ஆயிரம் பேர். மொத்த வாக்காளர்களில் 1.82 கோடி பேர் முதன்முறை வாக்காளர்களாவர். 85 வயதைக் கடந்த வாக்காளர்கள் 82 லட்சத்துக்கும் மேல் உள்ளனர். 100 வயதைக் கடந்த வாக்காளர்கள் 2.18 லட்சம் பேர் உள்ளனர்.

**10.5 லட்சம் வாக்குச்சாவடிகள்:**

வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக 10.5 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும். எவ்வித வன்முறையும் இல்லாமல் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் விவரங்களை வாக்காளர்கள் அறிந்துகொள்ள செயலி அறிமுகப்படுத்தப்படுகிறது.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்:**

மிகுந்த உயர்ந்த தரத்தில் தேர்தல் நடத்தப்படும் என உறுதியளிக்கிறேன். தேர்தல் நேரத்தில் போலி செய்திகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொறுத்தவரையில், ட்ரோன் மூலம் மாநில எல்லைகள், சில சர்வதேச எல்லைகளில் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். தற்காலிக சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும். ஹெலிகாப்டர்கள், தனி விமானங்களில் கூட தீவிர சோதனை நடத்தப்படும்" என்றார்.




---

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

## மீனவர்களையும் - மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

### ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மார்ச் 17-**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும், இந்தியாஇலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவை விரைவில் கூட்டிடவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மீனவர்கள் உட்பட 15 மீனவர்கள், இந்திய எல்லையைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (15.3.2024) கடிதம் எழுதியுள்ளார்.


அக்கடிதத்தில், இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து தான் ஏற்கெனவே பலமுறை கடிதம் எழுதியுள்ளதாகவும், கடந்த வாரம் எழுதியிருந்த கடிதத்தில் இலங்கையில் சிறைபிடிக்கப் பட்டிருந்த 22 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க தான் கோரியிருந்ததையும் சுட்டிக் காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், நேற்று முன்தினம் (15.03.2024) தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் உட்பட 15 மீனவர்களும், அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாக கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்று மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் சீர்குலைவதுடன், மாநிலத்தில் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமூகத்தினரிடையே பெருத்த கொந்தளிப்பும், விரக்தியும் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இப்பிரச்சினைக்குத் தூதரக நடவடிக்கையின் மூலம் தீர்வு காண வேண்டியது மிக அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

"எனவே. இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, அதன் மூலம் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க இலங்கை அதிகாரிகளை வலியுறுத்த வேண்டுமென்றும், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்."

என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வலைத்தளங்களில் வலம் வருவது!




---

### சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு

## இரண்டு சான்றிதழ்கள் வழங்குவதற்கு பதிலாக ஒரே சான்றிதழ்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மார்ச் 17-**

**சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities மற்றும் Denotified Tribes என இரண்டு சான்றிதழ்கள் வழங்குவதற்கு பதிலாக ஒரே சான்றிதழ் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது தொடர்பான அரசு செய்திக் குறிப்பு வருமாறு:-


சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப் பரம்பரை சட்டத்தினால் (Criminal Tribes Act) பாதிக்கப்பட்ட வகுப்பினர்கள், சீர்மரபினர் வகுப்பு என வகைப்படுத்தப்பட்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருடன் சேர்த்து 20% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு 68 வகுப்பினர்கள் சீர்மரபினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 29.7.2008இல் அரசாணை (நிலை) எண்.85இல் தமிழ்நாடு சட்டம் 45/1994இன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டு, சீர்மரபினர் வகுப்பினர் என சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

பின்னர், அரசாணை (நிலை) எண்.26, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 8.3.2019இல் வெளியிடப்பட்ட ஆணையில், மாநில அரசின் இட ஒதுக்கீடு (20% reservation) மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNC) என அழைக்கப்படுவர், எனவும் ஒன்றிய அரசின் நலத்திட்ட பயன்களைப் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNT) என அழைக்கப்படுவர் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகளின் படி இரண்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், அவற்றை பெறுவதில் நடைமுறையில் சிரமம் உள்ளதாகவும் அதற்கு பதிலாக ஒரே சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அந்த கோரிக்கைகளை அரசு ஆய்வு செய்து, சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities / Denotified Tribes என இரண்டு சான்றிதழ்களுக்குப் பதிலாக ஒரே சான்றிதழ் வழங்க தெளிவுரைகள் வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இன்று வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய தெளிவுரையின்படி, இனி வருவாய் அலுவலர்கள் சீர்மரபின வகுப்பினர்களுக்கு ஒரே சான்றிதழ் வழங்குவார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




வளர்ச்சிப் பாதையில் திருவண்ணாமலை
மாவட்டத்தின் தலைநகர் திருவண்ணாமலை
ஆன்மிக தலைநகர் திருவண்ணாமலை
திருவண்ணாமலை நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்திட்ட
திராவிடத்தின் திருவிளக்கு
சமூக நீதியின் பாதுகாவலர்
திராவிட மாடல் ஆட்சியின் தலைவர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கும்
மாண்புமிகு கே.என்.நேரு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் வழங்கல் துறை அமைச்சர்
அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
ARASU ARTS
திருவண்ணாமலை மாவட்ட பொது மக்கள்



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சி, கண்ண மங்கலம் கூட்ரோடு மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு உழவர் ஆலோசனை மையக் கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி திறந்து வைத்தார். உடன் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, சீனிராஜ், தேவிபென்ஸ் பாண்டியன், புவனேஸ்வரி சத்தியநாதன், ஸ்ரீமதி நந்தகுமார் மற்றும் ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஏ.வி.சாரதி, ஏ.வி.நந்தகுமார், ஏ.வி.சரவணன், வழக்கறிஞர் எஸ்.கே.நந்தகுமார் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஒன்றியம், சாத்தாம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் அங்கன்வாடி மையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம்.கதிர் ஆனந்த் கலந்து கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு, ஒன்றியக் குழு தலைவர் ப.ச.சுரேஷ்குமார், துணைத் தலைவர் சாந்திசீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள்

# பா.ஜ.க.வின் ஊழலை அம்பலப்படுத்தியுள்ளது!

## காங்கிரஸ் ஆதாரத்துடன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 17-

தேர்தல் நன்கொடை பத்திரங்கள் பா.ஜ.கவின் ஊழலை அம்பலப்படுத்தியுள்ளதாக குற்றம்சாட்டியுள்ள காங்கிரஸ் கட்சி, நன்கொடை பத்திரங்களின் முழு விவரங்களை வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்:

நேற்றிரவு எஸ்.பி.ஐ. வெளியிட்ட தேர்தல் நன்கொடை பத்திரங்களின் தரவு அடிப்படையில் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் மொத்தம் ஆயிரத்து 300 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள், தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும், இதில் பா.ஜ.க.வுகக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் நன்கொடை பத்திரங்கள் குறைந்தபட்சம் பா.ஜ.க.வின் 4 ஊழல்களை அம்பலப்படுத்தியுள்ளதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டியுள்ளார். பல்வேறு நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக அளித்து, உடனடியாக அரசாங்கத்திட மிருந்து பெரும் பலன்களைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஜெய்ராம் ரமேஷ்,

அ.மேகா இன்ஜினியரிங் மற்றும் இன்ஃப்ரா நிறுவனம் ஏப்ரல் 2023 இல், 140 கோடி ரூபாய் பா.ஜ.க.வுக்கு வழங்கியதாகவும், ஒரு மாதம் கழித்து அந்த நிறுவனத்திற்கு 14 ஆயிரத்து, 400 கோடி மதிப்பிலான தானே போரிவலி இரட்டை சுரங்கப்பாதை திட்டம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். பி. ஜிண்டால் ஸ்டீல் நிறுவனம் 2022 அக்டோபர் 7 அன்று 25 கோடி ரூபாய் நன்கொடை வழங்கிய நிலையில், 3 நாட்களுக்குப் பிறகு, அவர்கள் கரே பால்மா நிலக்கரிச் சுரங்கத்தை பெற்றதாக ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய விசாரணை அமைப்புகளை சோதனை நடத்தி, பின்னர் அந்த நிறுவனங்களில் இருந்து பாஜக நன்கொடை பெற்றதாகவும், முதல் 30 நன்கொடையாளர்களில் 14 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2023 டிசம்பரில் ஷிர்டி சாய் எலக்ட்ரிக்கல்ஸில் வருமான வரித்துறை சோதனை நடத்தியதாகவும், 2024 ஜனவரியில் அவர்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் 40 கோடி ரூபாய் பா.ஜ.க.வுக் நன்கொடை வழங்கியதாகவும் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். மேலும், மேகா இன்ஜினியரிங் & இன்ஃப்ரா நிறுவனம் 2020 அக்டோபரில் தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் 20 கோடி நன்கொடை வழங்கியதாகவும், 2020 ஆகஸ்ட் மாதம் அந்நிறுவனத்திற்கு 4 ஆயிரத்து 500 கோடி மதிப்பிலான ஜோஜிலா சுரங்கப்பாதை திட்டம் ஒதுக்கப்பட்டதாகவும், அதே நிறுவனம் 2022 டிசம்பரில் 56 கோடி நன்கொடை வழங்கி, அதே மாதம் பி.கே.சி. புல்லட் ரயில் நிலைய ஒப்பந்தத்தைப் பெற்றதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார். எஸ்.பி.ஐ வங்கி 2018 மார்ச் முதல் தேர்தல் பத்திரங்கள் விற்ற நிலையில், எஸ்.பி.ஐ வங்கி வழங்கியுள்ள தரவு 2019 ஏப்ரல் மாதத்தில் இருந்து மட்டுமே தொடங்குவதாகவும் தெரிவித்துள்ளார். இந்த தரவுகளில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பத்திரங்கள் இல்லை. மார்ச் 2018 முதல் ஏப்ரல் 2019 வரை இந்த விடுபட்ட பத்திரங்களின் தரவு எங்கே? என்று கேள்வி எழுப்பியுள்ள ஜெய்ராம் ரமேஷ், பத்திரங்களின் முதல் தவணையில், பா.ஜ.க. 95 சதவீத நிதியைப் பெற்றதாகவும், இதன் மூலம் பா.ஜ.க. யாரை பாதுகாக்க பார்க்கிறது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தல் பத்திரங்களின் தனிப்பட்ட பத்திர அடையாள எண்களை வழங்க வேண்டும் என்றும், இதன் மூலம் நன்கொடையாளர்களை பெறுநர்களுடன் துல்லியமாக ஒப்பிட்டு பார்க்க முடியும் என்றும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.

### தேனி மாவட்டம் - முத்தலாபுரம் “மொழிப் போர்த் தியாகி”

# தி.இராசு நினைவு இல்லம்: அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைக்கிறார்!

## படத்திற்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மலர் தூவி மரியாதை!

தேனி, மார்ச் 17-

செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (வெளியீடுகள்) இரா.அண்ணாவின் தந்தையும், தேனி மாவட்டம், முத்தலாபுரம் “மொழிப் போர்த் தியாகி”யுமான தி.இராசு நினைவாக புனரமைக்கப்பட்டுள்ள இல்லத் திறப்பு விழா இன்று (17.3.2024 - ஞாயிறு) காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நினைவு இல்லத்தினை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையேற்று திறந்து வைக்கிறார்.

நினைவுப் படத்தின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

இவ்விழாவில் தேனி மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வீ.ப. ஜெயசீலன், மாவட்டச் செயலாளர்கள் நா.இராம கிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச் செல்வன், ஐ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

எல்.மூக்கையா, பெ.செல்வேந்திரன், ஆ.மகராஜன் எம்.எல்.ஏ., கே.எஸ்.சரவணக்குமார் எம்.எல்.ஏ., தி.மு.இராசேந்திரன், பி.ஆசையன், பி.டி. செல்லப்பாண்டியன், அய்யம்மாள் ராமு, நிவேதா அண்ணாதுரை, எம்.சக்கரவர்த்தி, ரேணு பிரியா பாலமுருகன், வனிதா நெப்போலியன், கே.தனசேகரன், மகேஷ் குமார், ச.செல்வராஜ், முனைவர் இரா.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் எம்.ஜெயக்குமார், ஆர்.பாண்டியன், எஸ்.லட்சுமணன், பி.முருகேசன், ஆர்.அண்ணாதுரை, பண்ணை குமரன், வி.முருகேசன், பி.தங்கபாண்டியன், ஆர்.வி.ரத்தினசபாபதி, எல்.எம். பாண்டியன், ஒ.சுப்பிரமணி, எஸ்.தங்கபாண்டி, பி.ராஜாராம், எஸ்.பி.அய்யப்பன், என்.முத்துக்குமார், சி.லோகந்துரை, ஆர்.கே.செல்வக்குமார், எம்.சி.வீரபாண்டியன், ஆர்.புருஷோத்தமன், என். சி.நாராயணபாண்டியன், கே.முகமது இலியாஸ், எஸ். எம்.எஸ்.முகமது காசிம், ஒ.ஏ. முருகன், ஒ.சன்னாசி, என். முருகன், ஆர்.எஸ்.மதியழகன், எம்.வீரகுபேந்திரன், ஏ.மயில்வாகனன், ஜெ.வசந்த், பி. கணேசன் மற்றும் பிரதர்ஸ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் இரா.அண்ணா, பேராசிரியை முனைவர் அ.அனிதா அண்ணா, அ.முத்தமிழ்செல்வன், ந.பிரிதிவ்ராஜ் வருகை தரும் அனைவரையும் வரவேற்கின்றனர்.

### பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு:

# இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் குழு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச் 17-

பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை சிறப்பாக நடத்திட இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது குறித்த அரசாணை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை சிறப்பாக நடத்திட இந்து சமய அறநிலையைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் 20 உறுப்பினர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு கூட்டத்தில்,” தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் பெருமையை உலகில் உள்ள முருகபக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024ம் ஆண்டில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு உலகம் முழுவதும் உள்ள சமயப் பெரியோர்கள், ஆன்மிக அன்பர்கள், முருக பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் விழா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல், விளம்பரப் பணிகள் மேற்கொள்ளுதல், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல், வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் முக்கிய பிரமுகர்களை வரவேற்று, அவர்களுக்கான வசதிகளை செய்து தருதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் ஆன்மிகப் பெரியோர்களை கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுவின் துணைத் தலைவராக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும், உறுப்பினர் செயலராக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களும் உறுப்பினர்களாக பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர், கூடுதல் ஆணையர்கள், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபரசுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், முதுமுனைவர் மு.வெ.சத்தியவேல் முருகனார், சு.கி.சிவம், திருமதி.தேச மங்கையர்க்கரசி, ந.இராமசுப்பிரமணியன், தரணிபதி ராஜ்குமார், பழனி மற்றும் பலர் பங்கேற்றனர்.

**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**திலீப் அழகிரி**

**மார்ச் 17 (2013)**



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரான பட்டுக்கோட்டை அழகிரியின் புதல்வரான இவர், தி.மு.க.வின் துவக்க கால உறுப்பினர்.

1965ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை தண்டனை பெற்றவர்.

பத்திரிகையாளராகவும், மொழிப்போர்த் தியாகிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததோடு, கழகப் பணியும் – சமுதாயப் பணியும் திறம்பட ஆற்றி ஏழை, எளிய மக்களுக்கு அருந்தொண்டாற்றியவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் பா.ஜ.க.வை ஏற்க மாட்டார்கள்! எத்தனை முறை தமிழ்நாடு வந்தாலும்

# மோடி தமிழ்நாட்டு மக்களின் கோபத்திலிருந்து மீளவே முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

சென்னை, மார்ச் 17-

“பிரதமர் மோடி எத்தனை முறைதான் தமிழ்நாடு வந்தாலும், தமிழ்நாட்டு மக்களின் கோபம் - வெறுப்பிலிருந்து மீளவே முடியாது!” என்று, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

கன்னியாகுமரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியைப் பற்றி ஆதாரமற்ற அவதூறு குற்றச்சாட்டுகளை கூறியிருக்கிறார். இக்கூட்டணியின் நோக்கம் ஊழல் ஆட்சியின் மூலம் கொள்ளையடிக்க வேண்டுமென்பது தான் இலக்கு என்று பேசியிருக்கிறார். 2ஜி யில் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டியிருக்கிறார். அன்று சி.ஏ.ஜி. அளித்த அறிக்கையில், 2ஜி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசுக்கு 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டதாக அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில், டாக்டர் மன்மோகன்சிங் ஆட்சியில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

**பிரதமர் மோடிக்கு இது அழகல்ல!**

அந்த வழக்கு சில ஆண்டுகள் நடைபெற்று, எந்த ஆதாரத்தையும் குற்றம் சாட்டியவர்கள் வழங்க முடியாத காரணத்தால் குற்றவாளிகளை நிரபராதிகள் என சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி தமது தீர்ப்பில் கூறியிருந்தார். குற்றச்சாட்டு கூறியவர்கள் ஆதாரம் தருவார்கள் என்று பல மாதங்கள் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தேன் என்றும் அவர் கூறியதை எவரும் மறக்க இயலாது. உண்மைநிலை இருப்படியிருக்க திரும்பவும் 2ஜி சேற்றை வாரி இறைப்பது பிரதமர் பதவியில் இருக்கும் மோடிக்கு அழகல்ல.

அன்று 2ஜி அறிக்கைக்கு முக்கியத்துவம் வழங்கி குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு தொடுத்ததைப் போல, 2023 டிசம்பரில் சி.ஏ.ஜி. அளித்த அறிக்கையில் ஒன்றிய நெடுஞ்சாலைத்துறையின் 7 திட்டங்களை ஆய்வு செய்தது. அதன்படி பாரத் மாலா திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள சாலைகள், நெடுஞ்சாலைகள், விரைவு சாலைகளை இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டத்தில் 34,800 கி.மீ. தூரம் சாலை அமைக்க ரூபாய் 5 லட்சத்து 35 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 1 கி.மீ. தூரமுள்ள சாலைக்கு ரூபாய் 15.37 கோடி டெண்டர் மூலம் ஒதுக்கப்பட்டது. ஆனால், 26,316 கி.மீ. தூரம் சாலை அமைக்க ரூபாய் 8 லட்சத்து 46 ஆயிரத்து 588 கோடி செலவாகியிருக்கிறது. அதன்படி 1 கி.மீ. சாலை அமைக்க ரூபாய் 32.17 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது அனுமதிக்கப்பட்ட அளவை விட 1 கி.மீ. தூரம் சாலை அமைக்க ரூபாய் 16.80 கோடி அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. அதேபோல, துவாரகா சாலை திட்டத்திற்காக ரூபாய் 9,000 கோடி ஒதுக்கப்பட்டது. 1 கி.மீ. தூரத்திற்கு ரூபாய் 18 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், செலவழிக்கப்பட்டதோ ரூபாய் 250 கோடி. இது ஏறத்தாழ 13 மடங்கு அதிகமாகும்.

மேலும், நாட்டிலுள்ள 600 சுங்கச்சாவடிகளில் 5 சுங்கச்சாவடிகளை சி.ஏ.ஜி. ஆய்வு செய்தது. அதில் சட்ட விதிகளுக்கு புறம்பாக ரூபாய் 132 கோடி வசூல் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத்துறையில் நடைபெற்ற ஊழல் முறைகேடுகள் குறித்து சி.ஏ.ஜி. அறிவிப்பின் அடிப்படையில், அன்று ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ததைப் போல இன்று எந்த நடவடிக்கையையும் பா.ஜ.க. அரசு ஏன் எடுக்கவில்லை ? தன்னை புனிதமானவர் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிற மோடி, சி.ஏ.ஜி. அறிக்கைக்கு என்ன பதில் கூறப் போகிறார் ? இது ஊழல் இல்லை என்றால் எது ஊழல் என்பதை மோடி விளக்க வேண்டும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் 10 ஆண்டு கால ஆட்சியில் டாக்டர் மன்மோகன் சிங் உள்ளிட்ட எந்த காங்கிரஸ் தலைவர்கள் மீதும், எந்த நீதிமன்றத்திலும், எந்த ஊழல் வழக்கும் இல்லை. அப்படி ஏதாவது ஊழல் நடந்திருந்தால் 10 ஆண்டுகால மோடி ஆட்சியில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? இந்நிலையில், காங்கிரஸ் கட்சி மீது குற்றம் சாட்டுவதற்கு மோடிக்கு எந்த உரிமையும் இல்லை.

**தமிழக மக்களிடம் இது எடுபடாது!**

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தது தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி ஆட்சி தான் என்று மோடி குற்றம் சாட்டியிருக்கிறார். தமிழகத்தில் பாரம்பரியமாக நடந்து வந்த ஜல்லிக்கட்டுக்கு காங்கிரஸ் கூட்டணி ஆட்சி பதவி விலகுகிற 2014 ஆம் ஆண்டு வரை எந்த தடையும் விதிக்கப்படவில்லை. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மிகச் சிறப்பாக நடந்து வந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு 2015 இல் முதல் முறையாக தடை விதிக்கப்பட்டது. ஆனால், தமிழக அரசு எடுத்த தீவிர முயற்சியின் விளைவாக விதி விலக்கு பெற்று ஜல்லிக்கட்டு நடைபெற்றது. மீண்டும் ஒன்றிய அரசு விதித்த தடையை எதிர்த்து தான் மெரினாவில் மாபெரும் போராட்டம் நடத்தி ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி பெறப்பட்டது. இத்தகைய உரிமைப் போராட்ட வரலாற்றை முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற வகையில் பிரதமர் மோடி பேசியிருக்கிறார். இது தமிழக மக்களிடம் எடுபடாது.

தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் தமிழ் மொழியின் மீது பாசத்தை பொழிவது போல் பேசுகிறார் பிரதமர் மோடி. உங்களிடம் தமிழில் பேசப் போகிறேன் என்கிறார். உங்கள் மொழிக்கு மரியாதை வழங்க துடித்துக் கொண்டிருப்பதாக கூறுகிறார். ஆனால், செம்மொழி தகுதி பெற்ற தமிழ் மொழிக்கு 2017 முதல் 2020 வரை ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகை ரூபாய் 12.31 கோடி மட்டுமே. ஆனால், 24,000 பேர் மட்டுமே பேசுகிற சமஸ்கிருத மொழிக்கு அதே காலக்கட்டத்தில் ஒதுக்கிய தொகை ரூபாய் 643.84 கோடி . 8 கோடி மக்கள் பேசுகிற தமிழ் மொழிக்கு ஒதுக்கிய தொகையை விட 50 மடங்கு அதிகமாக காலாவதியான சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் மோடியின் தமிழ் பாசத்திற்கு அடையாளம். மோடியின் இரட்டை வேடத்திற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் ?

**சரியான பாடம் புகட்டுவார்கள்!**

மோடியின் தமிழக விரோத போக்கை முற்றிலும் அறிந்து வைத்திருக்கிற தமிழ்நாட்டு மக்கள் இதற்கெல்லாம் ஏமாற மாட்டார்கள். மோடி தமிழகத்திற்கு எத்தனை முறை வந்தாலும் மக்களின் வெறுப்பிற்கும், கோபத்திற்கும் ஆளாகியிருப்பதிலிருந்து மோடி மீளவே முடியாது. தமிழ்நாடு என்பது, பா.ஜ.க.வின் எதிர்ப்பு பூமி. தமிழக மக்கள் எந்த காலத்திலும் பா.ஜ.க.வை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். விரைவில் நடைபெறவுள்ள மக்களவை தேர்தலில் 10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. அரசின் தமிழக விரோதப் போக்கிற்கு சரியான பாடத்தைப் புகட்டுவார்கள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் ஆதியூர் ஊராட்சியில் ரூ.43 லட்சம் மதிப்பில் பல்வேறு பணிகளை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். கே.ஏ.குணசேகரன், திருமதி திருமுருகன், ஏ.பி.பழனிவேலு, வழக்கறிஞர் மாது, சக்ரவர்த்தி, தீபா, ஆர்வில், கிருஷ்ணமூர்த்தி, பழனி, யுவராஜ், செந்தில், தசரதன், சக்திவேல் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 29 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தடய அறிவியல் துறை இயக்குநர் திருமதி எல். விஜயலதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திண்டுக்கல்லில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார். அருகில் தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, மாவட்டப் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### காயிதே மில்லத் – கலைஞர் வழியில்

# எந்தக் காலத்திலும் சிறுபான்மைச் சமூக மக்கள் கழகக் குடும்பமாகத்தான் இருப்பார்கள்!

## மத்திய சென்னை ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை,மார்ச்.17-

**மத்திய சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தயாநிதி மாறன் தலைமையில், ரம்ஜான் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு தொகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்.**

அவ்வுரை வருமாறு:-

ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இதே அரங்கத்தில் 10 நாட்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சி நடந்தது. இப்போது இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன். வருடம் முழுவதும் நிகழ்ச்சி நடத்த முடியும் என்றால், அது சேகர்பாபுவால் மட்டுமே முடியும்.

**வளர்ச்சித் திட்டங்கள்**

இன்றைக்கு மட்டும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் இரண்டு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறார். மாலையில், முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட அரசு நிகழ்ச்சி. கிட்டத்தட்ட 4 ஆயிரம் கோடி ரூபாய் வடசென்னைக்கான வளர்ச்சித் திட்டங்கள். அந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டு, இப்பொழுது இப்படி ஒரு சிறப்பான நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். அண்ணன் சேகர்பாபு அவர்களை விட்டால், 24 மணி நேரமும் நிகழ்ச்சி நடத்தக்கூடியவர்தான். வாரம் ஏழு நாட்களும் நடத்துவார். வருடம் 365 நாட்களும் எனக்குத் தெரிந்து நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்.

பொதுவாக நிகழ்ச்சியை முடித்துவிட்டுத்தான் என்னிடம் தேதி கேட்பார். இப்போது மேடையில் உட்கார்ந்து இருக்கும்போதே கேட்டுவிட்டார். நாளைக்கு மாலை, நீங்கள் கொளத்தூர் வர வேண்டும். நாளைக்கு நான் அங்கு ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று தேதி கேட்டுவிட்டார். இப்படி பல நிகழ்ச்சிகளை நடத்தமுடியும் என்றால், அண்ணன் சேகர்பாபுவால் மட்டுமே முடியும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் மக்கள் நலத்திட்ட நிகழ்ச்சிகள் அதுவும் பார்த்தீர்கள் என்றால், சிறுபான்மை மக்களுக்கு இன்றைக்கு வேட்டி, சேலை, லுங்கி, 26 கிலோ அரிசி, பேரீச்சைப்பழம் இது தவிர, நலத்திட்ட உதவியாக 2,500 ரூபாய் கொடுக்கிறார்.

**விழா நாயகன்**

நான் கேட்டேன், `இந்த நிகழ்ச்சி எத்தனை வருடங்களாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று. நான் இப்போதுதான் 30 வருடமாக நடத்திக்கொண்டிருக்கிறேன் என்றார். அந்த அளவிற்கு `விழா நாயகன்' என்றால், நம் தலைவர் அவர்களால் தொடர்ந்து பாராட்டப்பெற்றவர்தான். நான் சொல்லத் தேவையில்லை. உங்கள் அத்தனைப் பேரையும் அடிக்கடி பார்க்கிறேன் என்று நினைக்கிறேன்.

நிறைய இடத்திற்கு போகும் போது சொல்வார்கள் `என்னங்க என்ன பிரச்சனை என்றாலும், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி என்றால், உடனே தீர்த்து வைத்து விடுகிறீர்களாமே, நிறைய நலத்திட்ட உதவிகள் கொடுக்கிறீர்களாமே, என்று சொல்வார்கள்.

இப்போது என் தொகுதி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியைவிட, இந்த மாவட்டத்திற்குக் குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், இந்தத் துறைமுகம் பகுதிக்குத்தான் நான் அதிக முறை வந்திருக்கிறேன். அதையும் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். தொகுதி மாறி, நான் உங்கள் தொகுதிக்கு வந்து விடுகிறேன். வந்தால், கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது தொகுதி மாறுகிறேனோ இல்லையோ, முதலில் வீடு மாற வேண்டும்.

**எழுச்சியான வரவேற்பு**

ஒவ்வொரு முறை இந்த மாவட்டத்திற்கு வரும்போதும் நீங்கள் கொடுக்கின்ற எழுச்சியான வரவேற்பு. அது ஒருமுறைகூட குறைந்தது கிடையாது. ஒவ்வொரு முறையும் உங்கள் அன்பும் எழுச்சியும் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள். ரம்ஜான் பண்டிகைக்கு மட்டும் நடத்தவில்லை. தீபாவளி பண்டிகைக்கும் அவர் நடத்தினார். கிறிஸ்துமஸ்சுக்கும் நடத்தினார். தலைவர் பிறந்தநாளுக்கும் நிகழ்ச்சி நடத்தினார். வருடம் முழுவதும் நடத்தியிருக்கிறார்.

**முக்கியமான ஒரு தேர்தல்**

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல், உங்களுக்கே தெரியும் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். நம் முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள், சி.ஏ.ஏ. (C.A.A) சட்டம் கொண்டு வரும்போது, 2019ஆம் ஆண்டு எதிர்த்தார். அதற்கு முதல் குரல் கொடுத்தது நம் தலைவர் தான். குரல் கொடுத்த கட்சி திராவிட முன்னேற்ற கழகம்தான். எனக்கு அதில் என்ன கூடுதல் பெருமை என்றால், நான் அரசியல், பொது வாழ்க்கைக்கு வந்து முதன்முதலில் கைது செய்யப்பட்டது, எப்போது தெரியுமா? அ.தி.மு.க ஆட்சியில் இந்த சி.ஏ.ஏ. (C.A.A) சட்ட நகலைக் கிழித்துப் போட்டு, ஒரு நாள் முழுக்க சிறையில் இருந்தேன். அதை என் வாழ்க்கையில் மிகப் பெருமையாகச் சொல்வேன்.



அப்போது இந்த சி.ஏ.ஏ. (C.A.A) சட்டம் வரும்போது தெரிந்தே ஆதரித்தது யார்? கூட்டணியில் இருந்த அ.தி.மு.க. இப்போது எதுவுமே தெரியாத மாதிரி, `கூட்டணி தர்மத்துக்காக நாங்கள் செய்தோம்' என்று வாய் கூசாமல் பொய்ச் சொல்லிக்கொண்டு உங்களிடம் வருவார்கள். நம்பாதீர்கள்.

**செல்லப் பிள்ளை**

இன்றைக்கு ஒன்றிய அரசு அந்தச் சட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டது. நம் முதலமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார். தமிழ்நாட்டில் என்றைக்குமே சி.ஏ.ஏ சட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என்று இந்தியாவிலேயே முதல் குரல், முதல் முதல்வர், நம் கழக தலைவர் அவர்கள்தான். எனவே, எப்பொழுதுமே எந்த காலத்திலும் சிறுபான்மை மக்கள் நம் கழகக் குடும்பமாக இருக்கும். கிட்டத்தட்ட இது ஒரு குடும்ப நிகழ்ச்சிதான். வரும்போது நிறைய பேர், `பட்ட பெயர்' எல்லாம் வைத்துக் கூப்பிட்டார்கள். நான் எப்பொழுதும் சொல்வது ஒன்றுதான். இந்த அமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் இன்றைக்கும் வரும் நாளைக்கு போய்விடும். அவை நிரந்தரமே கிடையாது. எது தெரியுமா நிரந்தரம்?

நான் எப்பொழுதும் உங்கள் வீட்டுச் செல்லப்பிள்ளையாக அதுவும் இந்தக் கிழக்கு மாவட்டத்திற்கு மிகவும் செல்லப்பிள்ளையாக, அதுவும் இந்தத் துறைமுகம் தொகுதிக்குச் செல்லப்பிள்ளையாக கடைசிவரை இருப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

முஸ்லிம் தலைவர் காயிதே மில்லத்

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதும் நம் முஸ்லிம் தலைவர் காயிதேமில்லத் அவர்கள் உடல் நலமில்லாமல் இருந்தார். கலைஞர் அப்போது கோயம்புத்தூரில் கழக நிகழ்ச்சியில் இருந்தார். அவருக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்தவுடன், கலைஞர் அவர்கள் அவர் நிகழ்ச்சிகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு, சென்னைக்கு வந்து அவரை வீட்டில் சென்று சந்தித்தார்.

**இஸ்லாமிய சமூக மக்கள்**

அப்போது காயிதே மில்லத் அவர்கள், கலைஞர் அவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு எங்கள் இஸ்லாமிய மக்களுக்காக நீங்கள் செய்தமாதிரி உதவி எந்த முதல்வரும் செய்ததில்லை. நான் மறைந்து விடுவேன் எனக்கு உடல்நிலை சரியில்லை. அப்படி நான் இறந்து போன பிறகு எங்கள் இஸ்லாமிய சமுக மக்களை நீங்கள்தான் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கலைஞரின் கைகளைப் பிடித்து சொன்னார்.

கலைஞர் விட்டுச்சென்ற பணியை இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செய்கிறார். உங்களுக்கு எப்போதுமே ஒரு பாதுகாப்பு அரணாக இருப்பது, நம் திராவிட முன்னேற்ற கழகமும் நம் தலைவரும்தான். தேர்தல் நேரம் வந்துவிட்டது. நாங்கள் தெளிவாக இருக்கிறோமோ இல்லையோ, இஸ்லாமிய சமுதாய மக்களான நீங்கள் எப்பொழுதுமே தெளிவான முடிவுதான் எடுப்பீர்கள்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் தமிழ்நாட்டிலேயே அறிவிக்கப்படாத ஒரு வேட்பாளர். உங்கள் தொகுதிக்கு யார் வேட்பாளர் என்று உங்களுக்கே தெரியும். சென்ற முறை பெற்ற வாக்கு வித்தியாசத்தை விட, அதிகமாக வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும். தேர்தலுக்கு தேர்தல் மட்டும் வருகின்ற கட்சி தி.மு.க கிடையாது.

இப்போது இந்த 10 நாட்களில் மட்டும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் நான்கு முறை வந்திருக்கிறார். இதற்கு முன்பு வந்தாரா? மழை பெய்தது, வந்தாரா? எட்டிக் கூடப் பார்க்கவில்லை. ஒன்றிய நிதியமைச்சர் வந்தார். ஆனால், நிதி வரவில்லை. ஆனால், நம் கழகத் தலைவர் அவர்கள் நிதி உதவி வழங்கினார். சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம் அதேபோல் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் எல்லாம் பெரிய பாதிப்பு.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆறாயிரம் ரூபாய் மக்கள் கேட்காமலேயே கொடுத்தார் நம் தலைவர் அவர்கள். அதுமட்டுமல்லாமல், அரசு மட்டும் இல்லாமல், இயக்கத்தின் சார்பாகவும் களத்தில் மக்களோடு மக்களாக நின்று பணியாற்றியது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்கு எங்களுக்குத் துணை நின்றது இஸ்லாமிய பெருமக்கள்தான். உங்களுக்கும் என் பாராட்டுகள்.

**37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு**

ஆனால், இப்போது தொடர்ந்து பார்த்தீர்கள் என்றால் மோடி இந்த 10 நாட்களில் மட்டும் நான்குமுறை வந்து வடை சுட்டுக்கொண்டு இருக்கிறார். நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக ஒன்றிய அரசிடம் கேட்டது இவ்வளவு பெரிய பாதிப்பு, 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டிருக்கிறது. நிதி கொடுங்கள் நாங்கள் மக்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டார். இதுவரைக்கும் ஒன்றிய அரசு கொடுக்கவில்லை. ஆனால் நம் தலைவர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 6 ஆயிரம் கொடுத்திருக்கிறார். அதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

**ஐந்தரை லட்சம் ரூபாய்**

நம் தமிழ்நாட்டில் இருந்து வரியாகக் கட்டுகின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் திருப்பி ஒன்றிய அரசு எவ்வளவு தெரியுமா தருகிறது. நாம் ஒரு ரூபாய் கட்டினால், நமக்கு திருப்பி தருவது வெறும் 28 பைசா. கடந்த 5 வருடத்தில் வரியாக நாம் ஐந்தரை லட்சம் ரூபாய் கட்டியிருக்கிறோம். ஆனால், நமக்கு எவ்வளவு தெரியுமா கொடுத்திருக்கிறார்கள், வெறும் ஒன்றரை லட்சம் கோடி.

பா.ஜ.க ஆளுகின்ற அந்த மாநிலங்களுக்கெல்லாம் அதிக நிதி கொடுக்கிறார்கள். கேட்காமலேயே கொடுக்கிறார்கள். குஜராத்தில் வெள்ளம் வரும்போது ஒன்றிய பிரதமர் அடுத்த நாளே அங்கு சென்று நிதி கொடுத்தார். எனவே, நீங்கள் அத்தனைப்பேரும் எப்படி சென்றமுறை ஒரு நல்ல முடிவை எடுத்தீர்களோ, அதேமாதிரி இப்போதும் செயல்படுங்கள். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் தேதி, எனக்குத் தெரிந்து நாளையோ, நாளை மறுநாளோ அறிவித்து விடுவார்கள்.

**40 நாட்கள் பிரச்சாரம்**

நான் இங்கே முக்கியமாக வந்தது. அடுத்த 40 நாட்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட போகிறேன். எனவே, உங்களின் வாழ்த்துகளோடு தேர்தல் பிரச்சாரத்தை துறைமுகம் தொகுதியில் கிழக்கு மாவட்டத்தில் ஆரம்பிப்பதே எனக்கு மிகப்பெரிய பெருமை என்று கூறிக்கொண்டு, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, வந்திருந்த அத்தனைப் பேருக்கும் என் ரம்ஜான் வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராஜசேகர், முரளி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், ஜி.எம்.தேவன், ஸ்ரீராமுலு, இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், அயலக அணியின் துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி, சிறுபான்மை அணியின் மாநிலத் துணைச் செயலாளர் ஷேக் அப்துல்லா, மாவட்டத் துணை அமைப்பாளர் புகாரி,

டான் பாஸ்கோ பள்ளியின் முதல்வர் கிரகரி தேவராஜ், கனி, கலைச்செல்வி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், விஜயகுமார், விநாயகம், பிரதீப் குமார், சம்பத், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெகதீஷ், விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலச் துணைச் செயலாளர் கௌதம், மாமன்ற உறுப்பினர்கள் ஆசாத், பரிமளம், நவீன், ரங்கீலா ராஜேஷ், கதிரவன் என்கிற ராஜா, பரத்குமார், தொழிலதிபர் பக்கீர் பாய் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



பொதுப்பணித்துறை அமைச்சர் நேற்று (16.3.2024) சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் & தலைமை பொறியாளர் (பொது) கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப்பொறியாளர்டாக்டர்கே.ஆயிரத்தரசுஇராஜசேகரன்,நெடுஞ்சாலைஆராய்ச்சிநிலையஇயக்குநர்ஆர்.கோதண்டராமன் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்,

### ஆசிய வளர்ச்சி வங்கியின் மானிய நிதியில்

# ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 17

பருவ மழை காலங்களில் பெரு வெள்ள பாதிப்பை கட்டுப்படுத்தவும், மழை நீர் கடலில் சென்றடைவதை தடுத்து நீர்நிலைகளில் சேமிப்பதற்காகவும், பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு நீர் நிலைகளை சீரமைத்து காக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணியின் ஒரு பகுதியாக ஆசிய வளர்ச்சி வங்கி, Global Environmental Facility மானிய நிதியில் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணிக்கு ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணியில், ஏரியினை தூர்வாரி, ஆழப்படுத்தி, அகலபடுத்தி, ஏரியின் கரையை உயர்த்தி அமைத்து ஏரியின் கொள்ளளவு மூன்று மடங்காக அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த புனரமைப்பு பணியில் மதகுகளை சீரமைத்தல், பல்லுயிர் வாழ்விடங்களை மேம்படுத்துதல் பொது மக்கள் பயன்பாட்டிற்காக, ஏரியின் கரையில் பசுமை தோட்டம் மற்றும் நடைபாதை அமைத்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணியினால் ஏரியினை சுற்றியுள்ள பகுதிகளில் மழை நீர் தேங்குவது தவிர்க்கப்படும். மேலும் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணியினால் அருகில் உள்ள விவசாய நிலங்களுக்கு சீரான பாசன வசதி செய்து தரப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும்

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் அறிவிப்பு!

சென்னை,மார்ச்.17–

மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நேற்று முன்தினம் அறிவித்தார்.

அவரது அறிவிப்பில் மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் சு.வெங்கடேசன், திண்டுக்கல் தொகுதியில் சச்சிதானந்தமும் பேட்டியிடுகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராயர் நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் வேட்பாளர்கள் தேர்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பிறகு மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் திண்டுக்கல், மதுரை வேட்பாளர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் மதுரை மக்களவை தொகுதியில் தற்போதைய எம்.பி. சு.வெங்கடேசன் பேட்டியிடுவார் என்றும், திண்டுக்கல் மக்களவை தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக சச்சிதானந்தம் போட்டியிடுவர் என்று அறிவித்தார்.



சு.வெங்கடேசன்
மதுரை தொகுதி



சச்சிதானந்தம்
திண்டுக்கல் தொகுதி

35 ஆண்டுகாலம் மார்க்சிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக பணியாற்றி வருபவர் சச்சிதானந்தம். ஜனநாயக வாலிபர் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகியாக செயல்பட்டவர் சச்சிதானந்தம். மதுரை தொகுதியில் மீண்டும் சு.வெங்கடேசன் எம்.பி. போட்டியிடுகின்றனர். மதுரை, திண்டுக்கல்லில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் பணிகள் உடனடியாக தொடங்கும் என கே.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

### ராகுல் காந்தியின் ‘இந்திய நீதிப் பயணம்’ நிறைவு விழாவில் பங்கேற்க

# மும்பைக்கு - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

## மும்பை கழகத்தினருக்கு -அலி ஷேக் மீரான் - கரு.பழனிச்சாமி வேண்டுகோள்!

மும்பை, மார்ச் 17-

மும்பை மாநில அமைப்பாளர்கள் அலி ஷேக் மீரான் - கரு. பழனிச்சாமி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மும்பை வருகை தர இருக்கிறார்கள்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் நடைப்பயணம் இன்று(17ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) மும்பையில் நிறைவு பெறுகிறது.

இந்தியா கூட்டணி சார்பாக ஒரு மாபெரும் பேரணி பொதுக்கூட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க மும்பை தாதர் சிவாஜி பூங்கா மைதானத்தில் இன்று (17.3.2024 - ஞாயிறு) மாலை நடைபெற உள்ளது.

அந்த பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி அவர்களுடன் பங்கேற்க கழகத் தலைவர் அவர்கள் இன்று (17.3.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 11.30 மணிக்கு விஸ்டாரா விமானம் மூலம் மும்பை T2 விமான நிலையம் வருகிறார்.

மும்பை வரும் திராவிட மாடல் அரசின் நாயகன்,கழகத் தலைவர், மற்றும் நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோரை வரவேற்க கழக உடன்பிறப்புகள் தமிழ் அன்பர்கள் அனைவரும் விமான நிலையத்திற்கு வருமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன் அன்று மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் திரளாக தி.மு.க. கொடிகளுடன் கலந்து கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன்.

தேர்தல் நிதி பத்திர முறைகேடு அம்பலமாகி, பா.ஜ.க. கட்சிமக்கள் வெறுப்புக்கு உள்ளாகி உள்ள இந்த தருணத்தில் இந்தியா கூட்டணி சார்பாக மும்பையில் ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்களுடன் தி.மு.க. தலைவர் தளபதி கலந்து கொள்ளும் பேரணியை மராத்திய மாநில அனைத்து கூட்டணி கட்சி தோழர்களும் ஆவலுடன் எதிர் நோக்கி உள்ளனர்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

### இன்று நடைபெறுகிறது! அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

# கயல் தினகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி!

## படத்தை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைத்து சிறப்புரை!

சென்னை, மார்ச் 17 -

கழக இலக்கிய அணி முன்னாள் தலைவர் கயல் தினகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (17.03.2024- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.30 மணியளவில் முத்தமிழ் பேரவை, டி.என்.இராசரத்தினம் கலையரங்கம் துர்காபாய் தேஷ்முக் சாலை, இராஜா அண்ணாமலை புரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கயல் தினகரனின் புதல்வர்கள் தி.தமிழ்ச்செல்வன், தி.செழியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அன்னாரது படத்தினை திறந்து வைத்து பேருரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் குன்றக்குடி ஆதீனம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன், தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், கவிதா பதிப்பகம் - தலைவர் சேது சொக்கலிங்கம் ஆகியோர் நினைவுரை யாற்றுகின்றனர்.



திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் நன்றி கூறுகிறார். முன்னதாக கழக மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பனின் இசையஞ்சலி நடைபெறுகிறது.

### கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், பொதுப் பணித்துறையில்

# புதியதாக பணி நியமனம் பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு, பயிற்சி வகுப்பு!

## அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 17-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (16.03.2024) பொதுப் பணித்துறையில், புதியதாக நியமனம் பெற்ற 302 உதவிப் பொறியாளர்களுக்குப் பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து, உரையாற்றினார்கள்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையில்; கட்டடக் கலையின் தோற்றமும்வளர்ச்சியும் பற்றி விரிவாக விளக்கி கூறினார்கள்; ஆதியில் நாடோடியாக திரிந்துக் கொண்டிருந்த மனிதன், கலப்பையை கண்டறிந்தான். அதன் துணையால் நிலத்தை உழுது, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ள அறிந்தான். நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு குறிப்பிட்ட இடத்தில் தங்கி வாழ நினைத்தான். விலங்குகளிடம் இருந்து, தற்காத்துக் கொள்ள ஆறாவது அறிவை பயன்படுத்தினான். அதன் விளைவாக, தன் குடும்பத்தோடு பாதுகாப்பாக வாழ புகலிடம் அமைத்துக்கொள்ள களிமண்ணால், சுவர் எழுப்பி, மரக்கழிகளை குறுக்கும், நெடுக்குமாக போட்டு, சருகுகளையும், தழைகளையும் கொண்டு வீட்டை உருவாக்கினான். பின்னர் நெருப்பினால் சுடப்பட்ட செங்கல்லை உற்பத்தி செய்தான். படிப்படியாக களிமண், ஓலைக் குடிசைகள், கல்வீடுகளாக மாற்றினான். கட்டடம், வீடு, அரண்மனை, மாடமாளிகைகள், கோயில்கள் எல்லாம் கட்டத் தொடங்கினான்.

தமிழர் கட்டடக் கலையில் இன்று, கலை மற்றும் அறிவியல் சார்ந்த தொழில் நுட்பங்களில், உலகே வியந்து, நிமிர்ந்து பார்க்கும் சாதனைகளை உள்ளடக்கியதே தமிழர் கட்டடக் கலை ஆகும். அக்காலத்தில் கட்டப்பட்டக் கோவில்களும், கோட்டைகளும், அணைகளும், தமிழர்களின் அறிவியல் நுட்பத்தையும், தொலைநோக்குத் திறனையும், கலை அறிவையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

**“கல்லு முலோகமும் செங்கலு மரமும்**

**மண்ணுஞ் சுதையும் தந்தமும் வண்ணமும்**

**கண்ட சர்க்கரையு மெழுகு மென்றிவை**

**பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன”**

என சங்க இலக்கியங்களில் கூறுவது போல்,

சுடுமண், மச்சு, மாடம், முற்றம், மூன்றில், காலதர், சாளரம் போன்ற கட்டக் கலைச் சொற்கள் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டடக் கலைக்கு மூன்று கூறுபாடுகள் உள்ளன அவை, 1) ஒரு கட்டடம் எதற்காக கட்டப்படுகிறதோ அதற்கான சமூக தேவைகளை நிறைவுசெய்ய வேண்டும். 2)பயன்படுத்த ப்படும் பொருள் தரமாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். 3) அதன்பின், கலைத் திறனுடன் இருக்க வேண்டும். பழந்தமிழர் கட்டடங்கள் அவற்றுக்கான சமூகத் தேவைகளை நிறைவு செய்தன. உறுதியாகவும், நீடித்து நிற்பவையாகவும், பொருத்தமாகவும் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக கலையாகவும் இருந்தன. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கட்டமைப்புகளை விரைவில் உருவாக்கும் ‘பிரிபேப்ரிகேட்டடு’ கட்டுமான யுக்தி மூலம் சில வாரங்களில் வீடுகளை அழகாக உருவாக்கி குடியேற இயலும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

கட்டடங்கள் பழுதாகக் காரணங்களைப் பற்றி பயிற்சிப் பெறுவர்களுக்கு விளக்கி கூறினார்கள் அவை, மண்ணின் தாங்கும் சக்தி குறைவு, கட்டட வடிவமைப்பில் குறைபாடுகள், ஒரு நோக்கத்தில் கட்டப்படும் கட்டடம் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல், தரக்குறைவான கட்டுமானப் பொருட்கள், மோசமான தொழில் தன்மையில் கட்டடம் எழுப்புதல், கான்கிரீட் வேலைக்குப் பிறகு க்யூரிங் செய்யாமல் விடுதல், நிலநடுக்கத்தினால் உண்டாகும் பளுவை கணக்கில் கொள்ளாதது, அஸ்திவாரத்தை சுற்றி தேங்கி நிற்பது, அஸ்திவாரத்தை சுற்றி மரங்களை வளர்த்தல், முட்டுக் கொடுக்காமல் அஸ்திவாரத்திற்கு ஒட்டினாற்போல் பள்ளம் தோண்டுதல், எவ்வித எச்சரிக்கை நடவடிக்கையையும் எடுக்காமல் சுவர்களை இடித்தல், இப்பயிற்சி வகுப்பில் பங்குப் பெற்றுள்ள உதவிப் பொறியாளர்கள் அனைவரும் இதைப்போல காரணங்களை விரிவாக அறிந்து கொள்ளும்போதுதான், எதிர்காலத்தில் அவர்கள் மேற்கொள்ளும் கட்டடப் பணிகள் சிறப்பாக அமையும் என்று எடுத்துரைத்தார்கள்.

இப்பயிற்சி வகுப்புத் தொடக்க விழாவில், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (பொது) கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் டாக்டர்.கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.இரகுநாதன், கோவை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.காசிலிங்கம், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் எ.வள்ளுவன், உணவுப் பொருள் வழங்கல் & பாதுகாப்புத் துறை தலைமைப் பொறியாளர், அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை தலைமைப் பொறியாளர் பெரியசாமி மற்றும் இதர பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் படகுக் குழாம்களில் கடந்த 11 மாதங்களில்

# 42,94,477 சுற்றுலாப் பயணிகள் படகுச் சவாரி செய்துள்ளனர்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, மார்ச் 17-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2023 ஏப்ரல் முதல் 2024 பிப்ரவரி மாதம் வரை 11 மாதங்களில் மொத்தம் 42,94,477 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர்கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (15.3.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது :

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், சுற்றுலா பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டியுள் ளார். சுற்றுலா கொள்கை 2023 ஐ வெளியிட்டு, சுற்றுலாத்துறையில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டார் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 590 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிய படகு குழாம்கள் சுற்றுலா பயணிகளுக்காக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் 2023 ஏப்ரல் முதல் 2024 பிப்ரவரி மாதம் வரை 11 மாதங்களில் மட்டும் மொத்தம் 42,94,477 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்களுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

வருகின்ற கோடை விடுமுறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் முன்பதிவு செய்து மலைவாழிடங்களுக்கும், பிற பகுதிகளுக்கும் பொதுமக்கள் சுற்றுலா மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நகரின் மையப்பகுதிகளில் குறிப்பாக பேருந்து நிலையத்தில் இருந்து மிக அருகில் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து வெவ்வேறு ஊர்களில் 3 நாட்கள் தங்குபவர்கள், ஒரே விடுதியில் 3 நாட்களுக்கு தங்குபவர்கள், மொத்தமாக 5 அறைகள், 10 அறைகள், 20 அறைகள் என முன்பதிவு செய்பவர்கள் ஆகிய நபர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வெவ்வேறு சதவீதத்தில் வழங்கப் படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்களது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044 25333333, 04425333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்/

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், ஏலகிரிமலை மலைவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று ஏலகிரிமலை முதல் திருப்பத்தூர் வரை மகளிருக்கு கட்டணமில்லா பயணம் திட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளரும்,ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி,மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சதிஷ்குமார், ஒன்றியக்குழு தலைவர் சத்யா சதீஷ்குமார், மாவட்ட பிரதிநிதி பொன்னுரங்கம், ஒன்றிய கவுன்சிலர் லட்சுமி செந்தில்குமார், ஊராட்சிமன்ற தலைவர் ராஜஸ்ரீ மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைகட்டு சட்டமன்ற தொகுதி மத்திய ஒன்றியம் தேவிச் செட்டிகுப்பம் ஊராட்சி கிராமத்தில் புதிய கலைஞர் விழா மேடைஅடிக்கல் நாட்டு விழாவில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். அவருடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு ஒன்றியச் செயலாளர்கள் பி.வெங்கடேசன் கோ.குமாரபாண்டியன்,பகுதி செயலாளர் சி.எம்.தங்கதுரை ஒன்றியக் குழுத் தலைவர் சி.பாஸ்கரன் பொதுக்குழு உறுப்பினர் ஆர். சி.மணிமாறன் ஊராட்சி மன்றத் தலைவர் பிரேமா மணிமாறன் ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


சிவகங்கை மாவட்டம்
காரைக்குடி நகராட்சியை
மாநகராட்சியாக
தரம் உயர்த்திய
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கும்
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வடிகால் வழங்கல் துறை அமைச்சர்
கே.என்.நேரு
அவர்களுக்கும்
நெஞ்சார்ந்த
நன்றியைத்
தெரிவித்துக்
கொள்கிறேன்
ARASU ARTS
மகிழ்வுடன் : கே.ஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.

# கலைஞரும் நானும்

61

“தந்தை பெரியாரின் கனவைச் செயல்படுத்திய பெருந்தொண்டர் என்கிற வகையில், முத்தமிழறிஞர் கலைஞருக்கு தமிழ்நாடு என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது. பெரியாரின் தொண்டன் என்கிற முறையில், கலைஞர் என்னிடம் கொண்டிருந்த அன்புக்கு ஈடில்லை” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் நடிகர் சத்யராஜ்.



# “கலைஞர் மேடையில் எம்.ஜி.ஆர் வசனம் பேசினேன்!”

**சத்யராஜ், நடிகர்**

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வசனங்களைப் பேசித்தான் திரையுலகில் வாய்ப்புகளைத் தேடினேன். அந்த ஆளுமையுடன் பின்னாட்களில் கொள்கை இணக்கத்துடன் பயணிக்க வாய்ப்பு அமையும் என்றெல்லாம் நினைத்தே பார்த்ததில்லை. ஆனால், அப்படி நிகழ்ந்தது.

## கொள்கை தந்த வாய்ப்பு

அவருடைய திரைப்படங்களில் ‘பாலைவன ரோஜாக்கள்’, ‘மண்ணின் மைந்தன்’ என இரண்டு படங்களில் நடித்திருக்கிறேன். 1986-ஆம் ஆண்டில், இயக்குநர் மணிவண்ணன் நாம் இருவரும் சேர்ந்து ஒரு படம் செய்ய உள்ளோம் என்றும், அந்தப் படத்தின் சிறப்பு, அதற்கு கலைஞர் கதை வசனம் எழுத உள்ளார் என்றும் கூறியிருந்தார். அந்தப் படம்தான் ‘பாலைவன ரோஜாக்கள்’.

நான் கலைஞர் வசனத்தில் நடிக்கப் போகிறேன் என உற்சாகமாக இருந்த நேரம். அப்போது நான் வளர்ந்து வரும் நடிகர் என்பதால், என் மீது அக்கறை கொண்ட நண்பர்கள் சிலர், அந்தப் படத்தில் நடிக்க வேண்டாம், எப்படியாவது தவிர்த்து விடுங்கள் என ஆலோசனை கூறினர். கலைஞர் படத்தில் நடித்தால், அரசியல் முத்திரை விழுந்துவிடும், வளர முடியாது என்று குறிப்பிட்டனர். ஆனால், அவர் வசனத்தில் நடிக்கும் வாய்ப்பைத் தவற விட எனக்கு மனமில்லை.

நடிகர் திலகம் சிவாஜி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ஆகியோருக்கெல்லாம் வசனம் எழுதி, அவர்கள் மீது விழாத முத்திரையா நம் மீது விழப்போகிறது என நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனாலும் அவர்களும் விடாமல், சம்பளத்தை இரண்டு மடங்காக்கினர். அதுவும் ஓ.கே ஆகிவிட்டது. கடைசியாக, கலைஞர் ஏற்கெனவே எடுத்த இரண்டு படங்கள் ஓடவில்லை என்றும், அதனால் அவருக்கு இப்போது நேரம் சரியில்லை என்றும் கூறினர். அப்போதுதான், நான் நாத்திகன், பெரியார் தொண்டன் என்கிற விவரத்தையே அவர்களிடம் கூறி, ‘எனக்கு இதுபோன்ற நம்பிக்கைகள் கிடையாது. நான் கலைஞர் படத்தில் நடிக்கிறேன்’ என உறுதி காட்டி, அதில் நடித்தேன்.

அப்படித்தான் ‘பாலைவன ரோஜாக்கள்’ திரைப்படத்தில் கலைஞரின் கதை வசனத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பினை வாங்கிக் கொடுத்தது தந்தை பெரியாரின் கொள்கைகள்.

அந்தப் படத்தில் நடிக்கத் தொடங்கிய போதுதான் முதன்முதலில் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தேன். நிறைய பேசி, ஊக்கப்படுத்தினார். அந்தப் படம் நான் கதாநாயகனாக நடித்து, 100 நாட்கள் ஓடிய முதல் படமாக அமைந்தது.

## அணிவித்த மோதிரம்

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் நடித்த போது, பலமுறை கலைஞர் அவர்களைச் சந்திக்க வேண்டிய வாய்ப்பு வந்தது. பல குறிப்புகளைக் கொடுத்து உதவி இருக்கிறார். தந்தை பெரியார் எப்படிப் பேசுவார் என்பதைப் பேசிக் காட்டி ஊக்கப்படுத்தி இருக்கிறார். அந்தப் படம் தணிக்கைக்குச் சென்று எந்தத் தடையும் இல்லாமல் வந்ததற்கு, அவர்தான் முக்கியக் காரணம்.



அந்தப் படத்தின் நூறாவது நாள் விழாவின்போது, தந்தை பெரியார் அணிந்திருந்த மோதிரத்தை, 70 ஆண்டு காலமாகப் பாதுகாக்கப்பட்ட மதிப்புமிக்க மோதிரத்தை **‘பெரியார்’** படத்தில் நடித்ததற்காகக் கலைஞர் எனக்கு அணிவித்த அந்த நாளை என்னால் மறக்க முடியாது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் அளிக்க, கலைஞர் அணிவித்த மோதிரம் என் வாழ்நாளில் நான் பெற்ற மதிப்புமிக்கப் பரிசு.

“இந்த மோதிரம் அணிந்திருக்கும் வரை, பகுத்தறிவுக் கொள்கையில் இருந்து விலகிச் செல்ல முடியாது. விலகிச் செல்ல முடிவெடுத்தால் இந்த மோதிரம் உன்னை விடாது” எனக்கூறித்தான் அணிவித்தார். அந்த அளவுக்கு என் மீது தனிப்பட்ட அன்பு காட்டியவர் கலைஞர். அவர் கையால் பல விருதுகளை வாங்கி இருக்கிறேன். சிறந்த நடிகருக்கான விருது, பெரியார் விருது, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் விருது என வாங்கி இருந்தாலும், அந்த மோதிரம்தான் அவர் எனக்கு அளித்த உயரிய விருது.

**அவை அந்த நேரத்து நகைச்சுவையாக இருப்பது மட்டுமல்ல; பிறகு அறிவார்ந்த முறையில் யோசிக்க வைக்கும். அதுதான் கலைஞர்.**

## இரண்டு முட்டாள்கள்

கலைஞர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் நான் பேசும் சூழல் அமைந்தால், அவரின் வசனங்களை எடுத்துவிடுவேன். ஒருமுறை கோபாலபுரம் சென்றிருந்தபோது, “என்ன சத்தி, நீ மேடையில் எப்பவும் சிவாஜி கணேசன் வசனத்தையே பேசிக் காட்டுற, உனக்கு எம்.ஜி.ஆர். தானே பிடிக்கும், அவர் வசனத்தையும் பேசு” என்றார். ‘என்ன வசனம் சொல்லுங்கய்யா’ எனக் கேட்டபோது, ‘நாம்’ படத்தில் எழுதிய வசனத்தைக் கூறி பேசச் சொன்னார். அதன் பின்னர் சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர். என இருவருக்கும் அவர் எழுதிய வசனங்களை மேடையில் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டேன்.

ஒரு தயாரிப்பாளரின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா, கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். நூலினை நான் வாசிக்கவில்லை. ஆனால், கலைஞர் முதல் நாளே வாசித்துவிட்டார். அந்த நூலில் “கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை நான் முட்டாள் என்று சொல்வேன்” என்கிற வாசகம் இருந்துள்ளதை வாசித்த கலைஞர், நிகழ்ச்சியில் பேசுகையில், நான் இந்த நூலை நேற்றுதான் வாசித்தேன். படித்த பின்னர் இந்த விழாவுக்கு வரலாமா? வேண்டாமா என யோசித்தேன். ஆனால், எனக்கு முன்னர் தம்பி சத்யராஜ் இருக்கிறார். ஆகவே ஒரு முட்டாள் இருந்தால்தான் வருத்தம், விழாவில், இரண்டு முட்டாள்கள் இருப்போம் என்பதால், தைரியமாக வந்தேன் எனக் கூறியதும் அரங்கே வெடித்துச் சிரித்தது.

அதுமட்டுமல்ல, “இன்று இங்கு இரண்டு முட்டாள்கள் மட்டும் இருக்கலாம், ஆனால், தந்தை பெரியாரின் கொள்கைகளை மக்கள் உள்வாங்கிக் கொள்ளும் காலத்தில், உலகம் முழுவதும் முட்டாள்களாக இருப்பார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்” என முடித்தார்.

அவர் நகைச்சுவையாகப் பேசுவதாகத் தோன்றும். ஆனால், அவை அந்த நேரத்து நகைச்சுவையாக இருப்பது மட்டுமல்ல; பிறகு அறிவார்ந்த முறையில் யோசிக்க வைக்கும். அதுதான் கலைஞர்.

## கொள்கைகளில் வாழ்கிறார்

அவருடன் எனக்கு, நடிகர் - வசனகர்த்தா என்கிற வகையில் நெருங்கிய தொடர்பு இருந்ததுபோல, தந்தை பெரியாரின் தொண்டர் என்கிற வகையில் மிக நெருங்கிய அன்பு கிடைத்தது. கலைஞர் இப்போது நம்முடன் இல்லை என்பது அறிவியல் உண்மை. ஆனால், அவர் நம்மைவிட்டு எங்கும் செல்லவில்லை, அவருடைய செயல்களாக, கொள்கைகளாக இருக்கின்றார்..

இட ஒதுக்கீடு, பெண் விடுதலை, பெண்களுக்கான சொத்துரிமை, சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு எனப் பல முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியவர் முதலமைச்சர் கலைஞர். அவற்றை முன்னெடுத்துச் செல்ல உடன்பிறப்புகள் இருக்கிறார்கள். அந்த வகையில், கலைஞர் என்றும் உயிர்ப்போடு இருப்பார்.

....பகிர்வார்கள்

### அழைக்கும் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!




சென்னையில் அறிவியக்கத்தினர் கூடும் மையமாக அண்ணா நூற்றாண்டு நூலகம் திகழ்வதைப் போல, தென் மாவட்ட மக்களின் அறிவியக்கத் தளமாக மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் அடையாளம் பெற்று வருகிறது. போட்டித்தேர்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருவதைப் போல, குழந்தைகள் வாசிப்பை ஊக்குவிக்க, வாரந்தோறும் கலை இலக்கிய நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது.

நூலகத்தின் குழந்தைகள் பிரிவின் மூலம் வாரந்தோறும் குழந்தைகள் சினிமா திரையிடல், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், கதைகள் வாசிப்பு, நாடகம், இசை எனப் பல்வேறு வகைகளில் தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அந்தந்த நாட்களுக்கு இணையத் தளம் மூலம் முன்பதிவு செய்து கலந்து கொள்ளலாம். கட்டணமில்லா அனுமதி அளிக்கப்படுகிறது.

17.03.2024, ஞாயிறு அன்று காலை 11.00 மணிக்கு, சந்திரமோகன் அவர்களின் ‘கொஞ்சம் கதையும் கொஞ்சம் நாடகமும் நிறைய கொண்டாட்டமும்’ என்ற நிகழ்ச்சி நடைபெற உள்ளது. விருப்பமுடைய குழந்தைகள், பெற்றோர்கள் இந்த நிகழ்வைப் பயன்படுத்திக் கொள்ள, கலைஞர் நூற்றாண்டு நூலகம் அன்புடன் அழைக்கிறது.

### ஃப்ளாஷ்பேக்



எ.வி.இராமநாதன்



**கூட்ட ஏற்பாடும் பாராட்டும்!**

1995-ஆம் ஆண்டு சர்வாதிகாரி போல் நடந்துகொண்ட ஜெயலலிதா அரசின் கடைசிக் காலகட்டத்தில், அவ்வை சண்முகம் சாலையில் இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் சிறப்புப் பேச்சாளராக ஐயா இரா.வெற்றிகொண்டான் அவர்களும், நம் கழகத் தலைவர் இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். கூட்டம் ஏற்பாடு செய்த, இளைஞர் அணியின் காப்பாளர் பொறுப்பில் இருந்த எனக்கு தளபதி அவர்கள் சால்வை அணிவித்துப் பாராட்டினார். இந்தப் படத்தில் அன்றைய கழக முன்னோடி, இன்றைய எங்கள் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அவர்களும் உடன் உள்ளார்.

**–எ.வி.இராமநாதன், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**அடையாளப் போராட்டம்!**

1962-ஆம் ஆண்டு மே மாதம் 26 மற்றும் 27 தேதிகளில், கழகத்தின் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டம், திருச்சியை அடுத்த வாத்தலை கிராமத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் விலைவாசி உயர்வுக் கண்டன ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவது, ஒருநாள் மட்டும் அடையாள மறியல் போராட்டம் நடத்துவதென அப்போது முடிவு செய்யப்பட்டது. அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளின்படி கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், கைத்தறித் துணி நூல் மீது விதிக்கப்பட்ட வரியைக் குறைக்க வேண்டும் எனப் பல ஊர்களிலும் மக்கள் அணிவகுப்பினை நடத்தினர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

420

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131